மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 1 ஜனவரி / Jan 2020



"என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்
கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு
நீங்கலாக்கிவிடுவார்" [சங்.25:15]

# இனிய புத்தாண்டு வாழ்த்துகள்




**ஆண்டவரே, புதிய ஆண்டிற்குள் கிருபையாய் அழைத்து வந்திருக்கிறீரே! எங்களுக்கு..**

* உமக்குப் பிரியமானதை எப்பொழுதும் செய்ய எங்களுக்குப் போதித்தருளும்.
* ஒவ்வொரு நாளும் உம்மோடு நடக்க "வழி இதுவே இதிலே நடவுங்கள்" என்ற உமது சத்தத்தைக் கேட்க எங்கள் செவியை கூர்மையாக்கும்.
* உம்முடைய வார்த்தைகளை, சிந்தனைகள் சிதறாமல் தியானிக்க எங்கள் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.
* உம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து ஆயத்தப்படுத்தும்.
* உம்மோடு இருப்பதுதான் எங்கள் இதயத்தின் வாஞ்சை. உம் சித்தம் செய்வதுதான், எங்கள் இதயத்தின் ஏக்கம்.
* எங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை எங்களுக்கு அருள் செய்யும்.
* இந்த புத்தாண்டு ஜெபம் எங்கள் அன்றாட ஜெபமாக மாறட்டும்.

**"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ் தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவதாக" [சங்.43:3].**



**மலர் - 18 ஜனவரி - 2020 இதழ் - 1**

**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 3 |
| 2. | தேற்றுவாரின்றிக் கண்ணீர்...? | 5 |
| 3. | குரங்குக்குட்டியும், பூனைக்குட்டியும் | 9 |
| 4. | அறியாத பாதையில்....ஆண்டவர் | 10 |
| 5. | தளபதி ஆலிவர் கிராம்வெல் | 14 |
| 6. | கிறிஸ்தியானின் மோட்ச...பாகம்-6 | 18 |
| 7. | ஜான் பிராட்ஃபோர்ட் | 22 |
| 8. | நீதியின் விளைச்சலை வர்த்திக்க.. | 25 |
| 9. | யார் என் நுகத்தடியை .. | 29 |
| 11. | செய்தி.... | 17 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, **"தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**"என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்" (சங்.25:15)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பு வாசகர்களுக்கு எங்களது புத்தாண்டு வாழ்த்துகள்.

**"கர்த்தர் எனக்காக யாவையும் செய்துமுடிப்பார். (ஏனெனில்) கர்த்தாவே உமது கிருபை என்றுமுள்ளது"** (சங்.138:8). எந்த எதிர்மறையான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், தாவீதுக்கிருந்த வல்லமையான விசுவாசத்தைப் பாருங்கள். ஒரு காலக்கட்டத்தில் இராஜாவாகிய சவுலுக்குப் பயந்து காடுகளிலும், மலைகளிலும் உயிருக்குப் பயந்து மறைந்து திரிந்து கொண்டிருந்தான். குகைகளே அவன் குடியிருக்கும் இடமாயிற்று. தாவீது இராஜாவாயிருந்தாலும் அவனுடைய மகன் அப்சலோமுக்குப் பயந்து மீண்டும் அதே வாழ்க்கைதான் அவனுக்குத் தொடர்ந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலெல்லாம் **"நானோ, கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன்"** என்று அறிக்கை செய்தவன் (சங்.31:14), **"நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்"** என்று திட்ட வட்டமாகச் சொன்னவன் (சங்.13:5), கிருபையைப் பற்றி 136ஆம் சங்கீதத்தைப் பாடியவன் ஏனெனில் கர்த்தரிடமுள்ள கிருபையை நமக்கிருக்கும் விசுவாசத்தைக் கொண்டு

தான் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நன்கு அறிந்திருந்தான். **விசுவாசமே நமக்கும் கர்த்தருக்கும் இடையேயுள்ள இணைப்புப் பாலம் அல்லது தொழிற்சாலைகளில் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லும் இயங்குவார் பட்டை (Conveyor Belt) என்று சொல்லலாம்.** விசுவாசமாகிய பாலம் அல்லது இயங்குவார்பட்டை நமக்கு இல்லாவிட்டால் கர்த்தரிடத்திலிருக்கும் கிருபை நமக்கு வந்து சேர முடியாது.

தாவீது இந்த விசுவாசத்தோடு நின்றுவிடாமல் அதை வலுப்படுத்திக்கொள்ள **"என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது"** என்று சொல்லுகிறான். தாவீதின் கண்கள் அவரை நோக்கிக் கொண்டிருக்கும் போது அவருடைய கண்களிலிருந்து கிருபை புறப்பட்டு வந்து தாவீதை சந்தித்தது. அதன் விளைவாக சவுலினிடமிருந்தும், அப்சலோமிடமிருந்தும் ஆச்சரியமாக காக்கப்பட்டான். வாழ்வின் நெருக்கமான பாதைகளில் சென்றபோதும் அதிசயமான விடுதலை பெற்றிருக்கிறான். எண்ணி முடியாத நன்மைகளைப் பெற்றிருக்கிறான். தாவீது பெற்றுக் கொண்ட கிருபையை ஏசாயா தீர்க்கதரிசி மேற்கோள் காட்டும்போது **"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்"** என்று கூறுகிறார் (ஏசா.55:3). கர்த்தருடைய கண்களே கிருபையின் ஊற்று என்று சொல்லலாம். "நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" என்று (ஆதி.6:8)இல் காண்பதுபோல "என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது" என்று (யாத்.33:17)இல் மோசேக்குச் சொன்னது போல தாவீதும் அவரை நோக்கிப்பார்த்து அவரிடமிருந்து கிருபையைப் பெற்றுக் கொண்டான். ஆகவேதான் தாவீது "கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை (மூலமொழியில் முகத்தை என்று சொல்லப்பட்டுள்ளது) நித்தமும் தேடுங்கள்" என்று சங்.105:4இல் குறிப்பிட்டுள்ளான். பொதுவாக ஒரு மனிதன் மற்றொருவரின் முகத்தைப் பார்க்கும்போது நம்முடைய மையநோக்கு (FOCUS) கண்களில்தான் இருக்கும். உதாரணமாக தேவையில் அல்லது நெருக்கத்திலிருக்கும் ஒருவன் தன் நண்பனிடம் அதற்குப் பரிகாரம் பெறச் செல்லுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். நண்பர்கள் இருவரின் கண்களின் சந்திப்பிலேயே நண்பன், வந்த நண்பனின் நிலைமையை உணர்ந்து கொள்வான். "நண்பனே, நான் உனக்கு என்ன செய்யவேண்டும்" என்று கேட்டு விடுவான். மனிதர்களுக்குள்ளே கண்களின் பரிமாற்றத்தில் இப்படிப்பட்டப் புரிந்து கொள்ளுதல் இருக்குமானால், நம் ஆண்டவரின் கண்களை நோக்கிப் பார்க்கும்போது நமக்கு நன்மையானதைச் செய்ய அவர் மிகுந்த இரக்கமுள்ளவராயிருக்கிறார். ஏனெனில் அவர் "இரக்கங்களின் பிதா" (2கொரி.1:3). அவருடைய கண்களை நோக்கிப்பார்த்து, கிருபையைப் பெற்றுக்கொள்ளுவோம்.

**- தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க..**

# தேற்றுவாரின்றிக் கண்ணீர் விடுகிறீர்களோ?

கிறிஸ்தவ சமுதாயம், முதலாம் நூற்றாண்டு அப்போஸ்தலர்களும் மற்றும் இயேசுவின் சீடர்களும் எப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சந்தித்தார்களோ அதே போன்ற உபத்திரவத்தை தேவ ஊழியர்களும் சபையாரும் இந்த 21-ம் நூற்றாண்டில் அனுபவித்து வருவதை ஊடகங்கள் மூலமாகவும் அறிகிறோம். கண்கூடாகவும் காண்கிறோம். ஊழியர்கள் கொடூரமாகத் தாக்கப்படுவதும், பொய் குற்றச்சாட்டுகளில் சிறையில் அடைக்கப்படுவதும், அவமானப்படுத்தப்படுவதும், "எங்கள் கிராமத்திற்குள் நுழையாதே" என ஒருசிலரால் அடித்து விரட்டப்படுவதும், 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்த ஆலயங்கள் கூட வன்முறைச் செயல்களால் மூடிவிடக் கட்டாயப்படுத்தபடுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக மாறிவரும் சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

### எச்சரிக்கையின் குரல்

கிறிஸ்தவம் முதல் நூற்றாண்டு தொடங்கிக் காலாகாலங்களாக உபத்திரவத்தின் பாதையைத்தான் கடந்து வந்து கொண்டிருக்கிறது. ரோமப் பேரரசு கிறிஸ்தவத்தை அழித்துவிட கொடிய வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. **"ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள்"** என்று (யாத்.1:12)இல் வேதம் சொல்லுகிறதுபோல முதலாம் நூற்றாண்டிலும் பெருகினார்கள், பரவினார்கள். "பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங்கொண்டு உங்களிடத்தில் இறங்கினபடியால் **ஆபத்துவரும் என்று சொல்லக் கேட்டேன்"** என்று (வெளி.12:12)இல் முதலாம் நூற்றாண்டில் பத்மு தீவிலிருந்த யோவானுக்கு ஆண்டவர் வெளிப்படுத்திக் கொடுத்ததை வாசிப்பதிலிருந்து நாம் கடைசி காலத்திற்குள் வந்திருப்பதால் பிசாசானவன் கிறிஸ்தவத்திற்கு விரோதமாக வல்லமையாக செயல்படுகிறான் என்பதை விளங்கிக் கொள்ளுகிறோம். "ஆபத்து வரும்" என்று சொல்லக் கேட்டது இப்போது செயல்பட ஆரம்பித்திருக்கிறது என்பதை உணரமுடிகிறது.

### சாலொமோனின் சமுதாயப் படப்பிடிப்பு

இஸ்ரவேல் தேசத்தின் இராஜாவாகிய சாலொமோன் உலகப் பிரசித்திப்பெற்ற ஞானி. ஏனெனில் அவனுக்குள்ள ஞானம் கர்த்தரால் அருளப்பட்டது. "இதிலே (ஞானத்திலே) உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்

பின் எழும்புவதுமில்லை" என்று (1 இரா.3:12)இல் கர்த்தர் சொன்னார். சாலொமோனின் ஞானத்திற்கு இதைவிட மேன்மையான சான்று இருக்கமுடியாது .வேதாகமத்திலுள்ள பிரசங்கியின் புத்தகத்தை சாலொமோன் ஞானி கி.மு. 971-931 காலக்கட்டத்தில் அவனது முதிர் வயதில் எழுதியதாக வரலாற்று ஆசிரியர்கள் கணிக்கின்றனர். அந்த காலகட்டத்தில் அவன் அளித்திருக்கும் ஒரு சமுதாயப் படப்பிடிப்பு (Portrayal of Society) இந்த நூற்றாண்டின் சமுதாயத்திற்கு ஒத்ததாகயிருக்கிறது.

**"நான் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்தேன்; இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது; அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை"** என்பதை பதிவு செய்துள்ளார் (பிர.4:1). உலகம் முழுவதும் கொடுமையினால் நிறைந்திருந்தது என்பதை சிந்தித்துப் பார்த்தேன் என்று கூறுகிறார். இந்தக் கொடுமைகளுக்கு என்ன காரணம் என்றும் அவற்றிற்குத் தீர்வு என்ன என்பதைக் குறித்தும் சிந்தித்திருக்கக் கூடும். சாலொமோன் இந்தக் கொடுமைகளைக் குறித்து என்ன முடிவுக்கு வந்தார்? **"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது"** என்று தீர்வைக் கொடுத்திருக்கிறார் (பிர.8:11). இதுதான் இன்றைய நிலை. கொடிய குற்றங்களுக்கான தண்டனைகளை நீதிமன்றங்கள் உடனடியாக வழங்குவதில்லை. "தாமதமாக அளிக்கும் நீதி மறுக்கப்படும் நீதியே" (Justice delayed is justice denied) என்று நீதிமன்றங்களில் ஒரு வழக்குச் சொல்லுண்டு, அதுதான் உண்மை.

"ஒடுக்கப்படுபவர்களின் கண்ணீரைக் கண்டேன்" (Seen the tears of the oppressed) என்கிறார். மத அடிப்படையில், ஜாதி அடிப்படையில் ஒரு கூட்டத்தார் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களைத் தேற்றுவார் இல்லை. ஏனெனில் ஒடுக்குகிறவர்கள் (oppressors) பெலவான்களாக (Powerfull) இருப்பதால் ஒடுக்கப்படுகிறவர்கள் (oppressed) தேற்றுவாரற்ற நிலையில் அமைதியாகக் கண்ணீர் விடுகின்றனர் (Silently Sheding tears). மறைந்த உச்சநீதிமன்ற நீதிபதி V.R.கிருஷ்ணய்யர் **"ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க ஏதுவான சட்டம் தேவை"** (We need a law to wipe away the tears of the poor) என்று ஒரு கருத்தரங்கில் குறிப்பிட்டார். இன்று சிறுபான்மைமதத்தினர் கண்ணீரின் பாதையில் தான் சென்று கொண்டிருக்கின்றனர். இதை அதிகம் விளக்கத் தேவையில்லை.

அன்றாட நாளேடுகளில் வரும் செய்திகள் இதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

**நீதிமன்றப் படப்பிடிப்பு** (Portrayal of the Court)

இப்படிப்பட்ட சமூகச் சூழ்நிலையின் மத்தியில் நீதி கிடைக்க நமக்குள்ள ஒரே வாய்ப்பு நீதிமன்றம் மட்டுமே. சாலொமோன் ஞானி நீதிமன்றத்தின் செயல்பாட்டை படம் பிடித்துக்காட்டுகிறார். அதுவும் இன்றுள்ள நீதிமன்றங்களுக்கு முற்றிலும் பொருந்துவதாகவே உள்ளது. **"பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதிஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது"** (பிர.3:16). ஆகவே நீதி கிடைக்க வேண்டிய இடத்தை அணுகினாலும் நீண்ட தாமதமாகிற அல்லது நீதி கிடைக்காத சூழ்நிலை. நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை இழக்கும் நிலைவரும்போது அதன் விளைவாக மக்கள் சட்டத்தை தங்கள் கையில் எடுக்கத் துவங்கும் அவலநிலை ஏற்படுகின்றது. தேசம் குழப்பங்களுக்குள்ளாகிறது. நியாயாதிபதிகளின் காலம் முடிவு பெறும் கால கட்டத்தில் **"அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்"** என்று வாசிக்கிறோம் (நியா.21:25). அதுவே தான் இன்றைய சூழ்நிலை.

**ஒடுக்கப்படுகிறவர்களுக்கு தீர்வு எங்கே?**

**"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்"** (சங்.121:1,2). இதுவே இராஜாவும் தீர்க்கதரிசியுமாகிய தாவீதின் நம்பிக்கை. மூன்று தேசத்துப் படையினர் ஒருமிக்க சேர்ந்துவந்து யூதாவின் இராஜாவாகிய யோசபாத்திற்கு விரோதமாகத் திரண்டு வந்த நேரத்தில் யுத்த நெருக்கத்தில் யோசபாத் **"எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது"** என்று முறையிட்டான் (2நாளா. 20:12). ஆச்சரியமான பதில் உடனே வந்தது. கர்த்தர், யகாசியேல் என்ற லேவியன் மூலமாகப் பேசினார். "இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்;

கர்த்தர் உங்களோடே இருக்கிறார்" என்றான்" (வ.17). கர்த்தர் தம் வார்த்தையின்படியே யுத்தம் செய்யாமலே யோசபாத்திற்கு வெற்றியைக் கொடுத்தார். யோசபாத் தன் நெருக்கத்தில் எதிர்த்து வந்த படையினரோடு ராசியாகிவிடுவோமா அல்லது வேறு தேசத்தாரோடு கூட்டணி சேர்ந்து கொண்டு யுத்தத்தைச் சந்திப்போமா என்று யோசனை செய்யாமல் கர்த்தரை மாத்திரம் நோக்கிப் பார்த்தான். யோசபாத் நமக்கு நல்லதொரு முன் மாதிரி. **நெருக்கப்படும்போதும், ஒடுக்கப்பட்டு தேற்று வாரின்றிக் கண்ணீர் விடும்போதும் நாம் எங்கே நோக்கிப் பார்க்கிறோம்?**

**பரலோக நீதிமன்றம்**

"பரலோக நீதிமன்றத்தை அணுகுங்கள்". (Accessing the courts of Heaven) என்ற ஆங்கிலப் புத்தகத்தை வாசிக்கும் நல்வாய்ப்புக் கிடைத்தது. அதில் அதன் ஆசிரியர் இராபெர்ட் ஹென்டெர்சன் (Robert Henderson) பரலோக நீதிமன்றத்தைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். பிதாவாகிய தேவன் (God the Father) நீதிபதியாக அமர்ந்திருக்கிறார். இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு குற்றம்சாட்டுகிற பிசாசானவன் (Proscutor) "இவன் தண்டனைக்கு உரியவன்" என்று குற்றச்சாட்டுகளை வைக்கிறான் (வெளி.12:10). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்வலோக நியாதிபதியாகிய தேவனுக்கு முன்பாக நின்று நமக்காகப் பரிந்து பேசுகிற வழக்கறிஞராக வழக்காடுகிறார். "ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1யோவா. 2:1)இல் என்று வாசிக்கிறோம். "பரிந்து பேசுகிறவர்" என்ற சொல் கிரேக்க மூலமொழியில் பேரகிளீட் (Parakelete) வழக்கறிஞர் (Advocate) என்று அர்த்தம். ஆகவே **நமக்கொரு வழக்கறிஞர் இருக்கிறார்** (We have an advocate) என்று ஆங்கில வேதாகமத்தில் வாசிக்கிறோம். தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர், பரலோக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளை பூலோகத்தில் செயல்படுத்துகிறவராயிருக்கிறார்.

சர்வலோக நீதிபதியாகிய கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நீதி தவறுவதில்லை. **"சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ"** என்று வேதம் சொல்லுகிறது (ஆதி.18:25). ஏசாயா தீர்க்கதரிசியும் இதை முன்னுரைக்கும் வகையில் **"கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்"** என்று (ஏசா.33:22)இல் கூறியிருப்பதை வாசிக்கிறோம். ஆகவே எதிர்மறையான சூழ்நிலைகளைக் கண்டு நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்

பண்ண வேண்டும் என்பதை வலியுறுத்த அநீதியான ஒரு நியாயாதிபதியைக் குறித்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறிய ஓர் உவமையை லூக்.18:1-8இல் வாசிக்கிறோம். அதில் இயேசு நமக்குக் கற்றுத்தரும் நற் செய்தி என்ன? **“தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாதிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ் செய்வார்** என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார். நமது விசுவாசத்தைக் கொண்டு அந்த நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வோம். நமது தேவைகளுக்கும் பிரச்சனைகளுக்கும் பரலோக நீதிமன்றத்தையே நாடுவோம். நன்மையான யாவும் பரத்திலிருந்து ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து வருகிறது (யாக்.1:17) அதைப் பெற்றுக் கொள்வோம். ●

- 31 ஆம் பக்க தொடர்ச்சி..

**நுகங்களை முறித்து, கட்டுகளை அவிழ்க்கிற கர்த்தர் நமக்கிருக்கிறார்.** இந்த காலக்கட்டத்தில் யாக்கோபு லாபானிடம் தான் ஊழியஞ் செய்து சம்பாதித்த தனது இரண்டு மனைவிகளையும், தன் பிள்ளைகளையும் தாரும் என்றும் தான் தன் சொந்த தேசத்திற்குப் போகத் தன்னை விட்டுவிடவும், தன் குடும்பத்திற்கென்று சம்பாதிக்கவும் வேண்டுமென்றும் சொன்னான். “அப்பொழுது லாபான்: உன் கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால் நீ இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன். உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் என்றான்” (ஆதி.30:27,28) கர்த்தர், யாக்கோபை ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டார். யாக்கோபு கர்த்தரின் ஆலோசனையின்படியே செயல்பட ஆரம்பித்தான். கர்த்தர் அவன் மீதுள்ள நுகத்தை முறித்து, கட்டை அவிழ்க்க ஆரம்பித்தார். கர்த்தர் யாக்கோபுக்குக் கொடுத்த ஆலோசனை என்ன? அவன் பெற்ற ஆசீர்வாதம் எத்தகையது என்பதை அடுத்த இதழில் காண்போம்.

-தொடரும், நன்றி: **சகோ. ஜுப்லின் ஜோசப்** போன்: 8015749129 ●

## குரங்குக்குட்டியும், பூனைக்குட்டியும்

ஆபத்து வரும்போது குரங்குக்குட்டி தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தப்பித்துக் கொள்ளும். குட்டி அவ்வாறு முயற்சி செய்யத் தவறினால் தாய்க் குரங்கு குட்டியைக் காப்பாற்றாது. ஆனால் தாய்ப்பூனை குட்டியைத் தன் வாயால் கவ்விப் பிடித்து தூக்கிக்கொண்டு போகும். குட்டி ஒரு முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. இதுவே கிருபை. இதுவே சுயமுயற்சிக்கும், கிருபைக்குமுள்ள வேறுபாடு. **“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு”(எபே.2:8).**

# அறியாத பாதையில் வழிநடத்தும் ஆண்டவர்

**"இதற்குமுன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை"**
**- யோசு.3:4**

மோசேயை அடுத்து யோசுவா, இஸ்ரவேல் மக்களை வாக்குத் தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத் திற்கு வழிநடத்திய தலைவன். அவர் களுக்கு யோசுவா சொன்ன வார்த் தைகளைத்தான் தலைப்பு வசனத்தில் வாசிக்கிறோம். 2020 ஆண்டுக்குள் நுழைந்திருக்கும் நமக்கும் இந்த வார்த்தைகள் எவ்வளவாய் பொருந்தும் என் பதைப் பாருங்கள்.

புதிய வருடம் - இதற்கு முன் நாம் போகாத பாதை - தெரியாத வழி - அறியாத திசை - முற்றிலும் புதிய பயணம். நவீன அறிவியல், வளர்ந்து வரும் தொழில்நுட்பம், அவிசுவாசிகளின் நம்பிக்கையாய் இருக்கும் கைரேகை சாஸ்திரம், குறி சொல்லுதல், மேலும் வாழ்வில் பெற்ற முந்திய அனுபவம், வயது- இவைகளெல்லாம் எதிர்காலத்தைக் கணிக்கவோ, அல்லது வரக்கூடிய, நிகழ்வுகளை மேற்கொள்ளவோ ஆற்றல் பெற்றவை அல்ல. இதனால் தான், எதிர்காலத்தைக் குறித்த பயம், சந்தேகம், கவலை - போன் றவை நம்மை மேற்கொள்ளு கின்றன. ஆம் புதிய ஆண்டில் பலதடைகள் - பல யோர்தான்கள்- பல எதிர்பாராத நிகழ்வுகள் தோன்றலாம்.

### இதோ யோசுவா தரும் வழி காட்டல்

நாம் எந்த சூழ்நிலையையும் மேற் கொண்டு வெற்றி நடைபோட, இரண்டு காரியங்களைச் செய்யுமாறு, அறிவுறுத்துகிறார்.

**1. உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின் செல்லுங்கள்.**
**2.உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்.**

### 1. உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின் செல்லுங்கள்

பழைய ஏற்பாட்டின் காலத்தில் கடவுளுக்கடுத்த காரியங்களில், உடன் படிக்கைப் பெட்டி முக்கிய இடம் பெற்றி ருக்கிறதைப் பார்க்கிறோம். இந்தப் பெட்டியில் 10-கட்டளைகள் ஐந்து ஐந்தாக கொண்ட இரண்டு பல கைகள், மன்னா வைக்கப்பட்டப் பொற்கலசம், ஆரோனின் துளிர்த்த கோல் இவைகள் வைக்கப்பட்டு இருக்கும். இப்பெட்டி கர்த்தர் தம் ஊழியக்காரர்களுக்குத் தமது சித்தத்தின் நோக்கமாகவும், தமது வல்லமை விளங்கும் சாட்சியாகவும், (நிரூபணமாகவும்) தம்மை தாம் சிருஷ்டித்த மனுக்குலத்தோடு பிரதான ஆசாரியன் மூலமாக அவர்களை சந்திக்கும் இடமாகவும், தேவ அறி வுரையின்படியே மோசேயைக் கொண்டு உருவாக்கப்பட்டதுமாகும்.

சந்திக்கும் இடம் என்று சொல்லும் போது **அவரது தெய்வீக சமுகம் (Divine Pre sence)வெளிப்படும் இடம்** என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து கொண்டு, ஆசாரியர்கள் கரைபுரண்டோடிய யோர்தான் நதியில் இறங்கிய போது யோர்தானின் நீரோட்டம் நின்று ஒரு குவியலாகக் குவிந்தது. இஸ்ரவேல் மக்கள் கடந்து செல்ல வழி திறந்தது. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து கொண்டு ஆசாரியர்கள் முன்செல்ல கர்த்தரின் கட்டளைப்படி இஸ்ரவேல் மக்கள் பின் சென்றனர். அவர்கள் ஒருமித்து ஆர்ப்பரித்த போது எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது. எரிகோவுக்குள் பிரவேசிக்க வழி பிறந்தது. இஸ்ரவேல் மக்கள் விசுவாசத்தோடு உடன்படிக்கைப் பெட்டியைப் பின் தொடர்ந்தபோது சாதிக்க முடியாததைச் சாதித்தனர். வெற்றி பெற்றனர்.

அன்று கடவுளின் பிரசன்னத்தை, உணர்ந்து கொள்ள, உடன் படிக்கைப் பெட்டி தேவைப்பட்டது. இன்று நமக்கு தேவ பிரசன்னத்தை உணர்த்துவது எது? கடவுளின் ஜீவனுள்ள வார்த்தைகளும், அவரின் மாறாத வாக்குத்தத்தங்களுமே. இவற்றை நாம் ஒவ்வொரு நாளும், மனதில் நிறுத்தி, அதன்படி நடக்க முற்படுவோமானால் வழி விலக மாட்டோம். நம்முன் வரும் எந்த யோர்தானையும் எந்த எரிகோவின் அலங்கத்தையும் சுலபமாய் நம்பிக்கையுடன் கடந்து செல்லவும் முடியும்.

ஆம், ஆண்டவரின் பிரசன்னத்தில், விடுதலையுண்டு. வெற்றியுண்டு. இதுதானே எல்லா விசுவாசிகளின் நடைமுறை அனுபவம். ஏழு மடங்கு சூடேற்றிய எரிகிற அக்கினிச் சூளை, பாபிலோனின் சிங்கத்தின் குகை போன்றவை இதைத்தானே நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. எதிர்நோக்கியிருக்கும் ஆண்டில் கடவுளின் பிரசன்னத்தை நாடுவோம். ஜெயம் எடுப்போம்!

**2. உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்**

இஸ்ரவேல் மக்கள் தங்களைக் கடவுளுக்குச் சொந்தமானவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள யோசுவா அவர்களுக்குத் தந்த யோசனை - உங்களைப் பரிசுத்தம் பண்ணுங்கள் என்பதே. ஏனெனில் தூயாதி தூயவர், அசுத்தமான பாத்திரங்களை, அசுத்தமான இடங்களை பயன்படுத்துவதில்லை. **“அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக”** என்று வேதம் சொல்லுகிறது (யாத்.25:8).

கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் இந்த விஷயத்தை விவிலியத்தில் நிறைய இடங்களில் காண்கிறோம். “நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்”.

“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்” (1 பேது.1:15-16).

பழைய ஏற்பாட்டில் பரிசுத்தம் என்ற பதம் பெயர்சொல்லாக, வினைச்சொல்லாக, உரிச்சொல்லாக - இப்படி 850 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்கிறோம். பரிசுத்தம் என்பது கடவுளுக்கும் பிரியமில்லாத காரியங்களிலிருந்து, பிரித்தெடுக்கப்பட்ட நிலையை குறிக்கிறதாய் இருக்கிறது. மேலும், பரிசுத்தமான வாழ்க்கை பிரகாசமான வாழ்க்கை. நாற்பது நாள்கள் மலையிலிருந்து இறங்கிய மோசே கடவுளின் பிரசன்னத்தில் இருந்ததால், அவரின் பரிசுத்தத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்ததால், அவன் முகம் பிரகாசித்திருந்ததைக் கண்ட இஸ்ரவேல் புத்திரர் அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள் என்று வாசிக்கிறோம் (யாத்.34:30).

**ஏன் பரிசுத்தம்?**

**“நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது”** (1தெச.4:3).பரிசுத்தம்தான் கிறிஸ்தவ வாழ்க்கையை பிரதிபலிக்கும் தன்மையாய் இருக்கிறது. பரிசுத்தம் தேவ மகிமையையும், வல்லமையையும் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் பரிசுத்தமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதே, தேவனுடைய சித்தமும், எதிர்பார்ப்புமாயிருக்கிறது. சூரியனை எப்படி எதாலும் மறைக்கமுடியாதோ, அப்படியே பரிசுத்தமான மனிதனையும் அவனது குடும்பத்தையும் யாராலும், எதாலும் மறைக்கவோ புறக்கணிக்கவோ முடியாது.

மங்கலான வெளிச்சத்திலிருந்து பிரகாசமான ஒளிக்குள் செல்லும்போது இதுவரை நம் கண்களுக்கு மறைவாயிருந்த பல பாவமான காரியங்கள் நமக்குப் புலப்படும். அவற்றை அறிக்கையிட்டு விட்டுவிடும்போது, பரிசுத்தம் நோக்கி நகரமுடியும். அப்படி பரிசுத்தமடையும்போது கடவுளின் முழுத்தன்மையையும் அடைந்து கொள்ளும் போதுதான் அவர் அருகாமையில் சென்றடைய முடியும். ஏனெனில் **“பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே”** என்று வேதம் சொல்லுகிறது (எபி.12:14). அவரால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை தெரிந்து கொள்ள முடியும். பரிசுத்தமின்மை, கடவுள் அதிசயங்களை நம் வாழ்வில் நடப்பிப்பதற்குத் தடையாயிருக்கிறது. பரிசுத்தமான வாழ்க்கை அதிசயங்களைக் காணச் செய்கிறது.

உடன்படிக்கைப் பெட்டியின் பின்னால் சென்று உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டால் தேவன் உங்கள் நடுவில் இருக்கிறார் என்பதைக் கண்டுகொள்வீர்கள் என்று

இஸ்ரவேல் மக்களுக்கு யோசுவா சொன்னபோது அவர்கள் அதற்கு செவிமடுத்து அப்படியே செய்தார்கள். தேவன் அவர்கள் நடுவில் இருந்ததை உணர்ந்தார்கள். அவர் நடத்திய அற்புதத்தைக் கண்கூடாகப் பார்த்தார்கள். வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரித்தார்கள். நாமும் இந்தப் புத்தாண்டில் தேவ பிரசன்னத்தை நித்தமும் நாடி அதின் பின் சென்று பரிசுத்தமாக வாழ தீர்மானம் செய்வோம். அவர் கரங்களில் நம்மை, ஒப்படைப்போம்.

இந்த ஆண்டு, இதுவரை கடந்து வந்த ஆண்டுகளைவிட, சிறந்த ஆண்டாக நம் வாழ்வில் அமையும் என்று பூரணமாய் விசுவாசிப்போம்.

''நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்'' (ஏசா.45:2). ''நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்'' (ஏசா.43:19). ''நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜீவாலை உன் பேரில் பற்றாது'' (ஏசா.43:2).

**"நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை... உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்; நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"** (யோசு.3: 4-5).

வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்வோம். செயல்படுத்துவோம். ஏனெனில் வாக்குத்தத்தங்களைத் தந்தவர் உண்மையுள்ளவர். அவர் மாறாதவர். பரிசுத்தமே நம்மை நித்திய வாழ்வுக்கு வழிநடத்தும். இந்த ஆண்டு நம் ஒவ்வொருவருக்கும் அற்புதங்களை காணும் ஆண்டாக இருப்பதாக!

கிறிஸ்துவின் கிருபையில்

**Dr.J.Johnson Sundararaj, Ph.D.,**
(Former Vice Principal, American college, Mobile : 98436-80054)

**4ம் பக்கத் தொடர்ச்சி....**

இந்தக் கிருபையை நாம் பெற்றுக் கொள்ளும்போது, நம்முடைய காரியங்களை அவர் பொறுப்பெடுத்துக் கொள்ளுகிறார். நம்முடைய பார்வை கர்த்தரை நோக்கியிருக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குக் கேடான, மறைவான கண்ணிகளுக்கு நம்மைத் தப்புவித்துக் காக்கிறவராயிருக்கிறார். இந்த புதிய ஆண்டின் தொடக்கத்தில் இப்படிப்பட்டக் கிருபையின் காவலைப் பெற்றுக் கொள்வோம். ஆண்டவர் நம்மோடிருந்து நமக்கு உதவி செய்வாராக.

இயேசுவின் பணியில்,
K. செல்வின் தங்கதுரை



# இங்கிலாந்தின் இராணுவத் தளபதி ஆலிவர் கிராம்வெல் சந்தித்த பேரதிர்ச்சி

இங்கிலாந்து நாட்டில் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்நாட்டின் இராணுவத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் இது. இங்கிலாந்திற்கும், பிரான்ஸ் தேசத்திற்கும் பல ஆண்டுகளாக யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். இங்கிலாந்து தேசம் அந்த யுத்தங்களில் பிரான்சை தோற்கடித்து வெற்றி கண்டது. எனினும் ஒரு முறை நடந்த யுத்தத்தில் இங்கிலாந்து அவமானப்படும் அளவிற்கு மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்தது. இங்கிலாந்து தேசம் பேரதிர்ச்சியால் மூழ்கியது.

ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) இங்கிலாந்தின் இராணுவப் படைத்தளபதியாக இருந்தார். யுத்த யுக்தியில் மிகச்சிறந்தவர். இராணுவ ரீதியான சகல காரியங்களிலும் மிகச் சிறந்தவர் என நற்பெயர் பெற்றவர். பல வெற்றிகளைக் கண்டவர். ஆனால் தோல்விக்குக் காரணம் என்ன என்பதை ஆராய ஆரம்பித்தார். உலகப் பேரரசான இங்கிலாந்திற்கு சிறிய பிரான்ஸ் நாட்டோடு தோல்வியா? இதை அவர் ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு செயல்பட்டார். இங்கிலாந்து இராணுவ இரகசியத் திட்டங்களை இராணுவத்திலுள்ள யாரோ தகவல்களை பிரான்ஸ் இராணுவத்திற்கு கொடுத்திருந்தாலொழிய இந்த தோல்வி ஏற்பட்டிருக்காது என்ற திட்டவட்டமான முடிவுக்கு வந்தார். கடைசியாக அதைக் கண்டுபிடிப்பதில் வெற்றியும் பெற்றார். ஓர் இளம் இராணுவவீரன் இங்கிலாந்து இராணுவ இரகசியங்களை பணத்திற்காக பிரான்ஸ் இராணுவத்திற்கு கொடுத்ததை கையும் மெய்யுமாக பிடித்துவிட்டார்கள். இது ஒரு வரலாற்றுச் சம்பவம். இந்த சம்பவம் இங்கிலாந்தையே உலுக்கிற்று. ‘‘அந்த இராணுவ வீரன் தேசத்துரோகி. அவன் சாகவேண்டும், அவன் சாகவேண்டும்’’ என்று தேசமே குரல் கொடுத்தது. இராணுவ நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பளித்தது. ‘‘நாளை பகல் 12மணிக்கு லண்டனிலுள்ள செயின்ட் பால்ஸ் கத்தீட்ரல் ஆலய மணி ஒலிக்கும்போது ஆலய வளாகத்தில் நாட்டு மக்கள் காணத்தக்கதாக அந்த தேசத்துரோகி சுட்டுக் கொல்லப்பட வேண்டும். ஒரு தேசத்துரோகிக்கு இந்த நாடு வழங்கும் மரணதண்டனையை மக்களெல்லாம் பார்க்கவேண்டும்’’ என்ற தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்டது.

குறிக்கப்பட்ட நாள் வந்தது. ஆலய வளாகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டனர். ‘‘நம் நாட்டைக் காட்டிக் கொடுத்த தேசத்துரோகி சாகப்போகிறான். சுட்டுக் கொல்லப் படப் போகிறான்’’ இதுவே எங்கும்

பேச்சாக இருந்தது. சுட்டுக் கொல்லப் பட வேண்டிய இராணுவவீரன் நிற்க வேண்டிய இடத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். இராணுவத் தளபதி கிராம்வெல் தண்டனை நிறை வேற்றப்படுவதற்குச் சற்று முன்பு வளாகத்திற்குள் நுழைந்தார். நம் நாட்டைக் காட்டிக் கொடுத்தவன் கொல்லப்படுவதை யாவரும் பார்க்க வேண்டும் என்ற வேகம் தளபதிக்கு. தண்டனை நிறைவேற்றப்படும் நேரம் வந்தது. ஆலயமணியை அடிக்க நான்கு இராணுவவீரர்கள் கயிற்றை இழுத்து அடிக்க ஆயத்த மாக நின்றார்கள். கயிற்றை இழுத்து மணியை அடிக்க ஆரம்பித்தார்கள். துப்பாக்கியால் சுடவேண்டிய இராணுவவீரர்கள் சுட ஆயத்தமாக நின்றனர் (Ready to Fire). ஆலிவர் கிராம்வெல் "Fire" (சுடு) என்று உரத்த குரலில் கட்டளையிட்டார். ஆனால் ஆலயமணி அடிக்க வில்லை. சுடுபவர்கள் அதே சம யத்தில் மணி ஓசையை எதிர்பார்த்து ஆயத்த நிலையிலேயே நின்றார்கள். ஏனெனில் மணியோசையும் Fire (சுடு) என்ற உத்தரவும் ஏக சமயத்தில் (Simultaneous) வரவேண்டும் என்ற நியதி முன்பாகவே கொடுக்கப் பட்டிருந்தது. மணியின் கயிற்றை இழுத்தார்கள். ஆனால் மணி யோசை வரவில்லை. கூடியிருந்த மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு. ஆலிவர் கிராம்வெல்லுக்குக் கடுங் கோபம் கொண்டு தானே மணியின் கயிற்றை பிடித்து இழுத்தார். மணி யோசை வரவில்லை. என்ன நடக்கிறது என்று புரியவில்லை. கயிற்றின் வழியாக இரத்தம் வடிந்தது. ஆலிவர் கிராம்வெல் கை யெல்லாம் இரத்தம். மணிக் கூண்டை உற்று நோக்கியபோது ஓர் இளம்பெண், மணியின் நாக்கை கெட்டியாகப பிடித்து தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். மணிக்கூண்டை நோக்கி அவளைச் சுட ஆலிவர் கிராம்வெல் உத்தர விட்டார். அவள் குண்டடிபட்டு ஆ... என்று அலறியபடி கீழே விழுந்தாள். அவளுடைய கைகளிலும், முது கிலும், சரீரத்தில் பல இடங்களில் பலத்த இரத்தக் காயங்கள்.

குற்றவாளி மீதிருந்த மக்கள் கவனமெல்லாம் மாறி அந்தப் பெண் பக்கமாகத் திரும்பியது. ''யார் நீ?'' ஆலிவர் கிராம்வெல் மூர்க்க கோபத் தோடு கேட்டார். ''நீங்கள் சுட்டுக் கொல்லப்போகும் இராணுவ வீரனின் மனைவி நான். எங்க ளுக்குத் திருமணமாகி ஒருமாதமே ஆகிறது. என் கணவரை என் உயிரினும் மேலாக நேசித்தேன். ஆனால் அவர் தேசத் துரோகக் குற்றச்சாட்டோடு மரணத்தை சந்திக்கப் போகிறார். ஆனாலும் நான் அவர்மேல் வைத்திருக்கும் அன்பை நான் வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தேன். ஆலயமணி ஒலிக்கும்போது அவர் சுட்டுக் கொல் லப்பட வேண்டுமென்பது தீர்ப்பு. ஆலயமணியோசையை கேட்கப் படாமல் நிறுத்திவிட்டால்... அதைத் தடுத்துவிட்டால்...என்று யோசித் தேன். நேற்று இரவே ஆலயகோபுர

மணிக்கூண்டிற்குள் போய் உட்கார்ந்தேன்...தண்டனை நிறுத்தப்பட்டுவிடுமா?...அது எனக்குத் தெரியாது. நான் என் கணவர் மீது வைத்திருக்கும் அன்பை என் கணவரும் அறிய வேண்டும். இந்த நாடும் அறிய வேண்டும். **நான் அவர்மேல் வைத்த அன்பு இயேசுகிறிஸ்து எனக்குக் கற்றுத் தந்த அன்பு என்பதை யாவரும் அறிந்து கொள்ளட்டும்.** நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. என்னை சுட்டு விட்டீர்கள். நான் சாகப் போகிறேன். என் மரணத்தின் நிமித்தம் அவரை விடுதலை செய்ய மாட்டீர்களா?" அந்தக் கெஞ்சுங் குரலோடு அவள் ஜீவன் பிரிந்தது.

"அவன் தேசத்துரோகி, அவன் சாகவேண்டும்" என்று குரல் கொடுத்த மக்கள் அவளுடைய மரணத்தைக் கண்டு பரிதபித்து அழ ஆரம்பித்தார்கள். அவளது மரணம் ஆலிவர் கிராம்வெல்லின் கடின உள்ளத்தை உடைத்தது. கண் கலங்கி நின்றார். ஒரு துரோகியின் மேல் வைத்த அன்பின் நிமித்தம் ஒரு பாவமும் அறியாத ஓர் இளம் பெண் தன் உயிரையே கொடுத்திருக் கிறாளே..." அப்படியே அவர் வானத்தை அண்ணாந்து பார்த்தார். ஆலய கோபுர உச்சியிலிருந்த சிலுவை அவர் கண்களில் பட்டது. தன்னையும் அறியாமல் தன் முழங் கால்களை முடக்கி முழங்கால் படி யிட்டார். "ஆண்டவரே, துரோகி களாக இருந்த எங்களுக்காக சிலுவையில் கொடிய மரணத்தைச் சந்தித்தீரே...அந்த மகாபெரிய அன்பை உணர்ந்த ஓர் இளம்பெண் துரோகியான தன் கணவனுக்காக தன் உயிரையே கொடுத்து விட்டாளே..."இயேசுகிறிஸ்து எனக்குக் கற்றுத்தந்த அன்பு" என்று சொன்னாளே...அந்த அன்பு, துரோகிக்காக அவள் செய்த தியாக அன்பு...அவளது மரணம் ஈடு செய்யப்பட வேண்டுமானால் துரோகி யான அவளது கணவன் விடுதலை செய்யப்படவேண்டும்" என்று தீர் மானித்தார். தியாக அன்பு துரோகி யின் உயிரை காப்பாற்றியது. அந்த "இராணுவ வீரனின் மரண தண்ட னையை மாற்றி விடுதலை செய் கிறேன்" என்று அறிவித்தார் (Judge-ment revised).

பாவிகளை மீட்க நீதிமானாகிய தேவ குமாரன் இயேசுகிறிஸ்து தமது ஜீவனையே சிலுவையில் கொடுத் தார். ஆகையால் நாம் பிழைத்திருக் கிறோம். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்க லாக அவராலே நாம் இரட்சிக்கப்படு வது அதிக நிச்சயமாமே" (ரோம.5:9). அவர் சிந்திய இரத்தத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இதுவே மாபெரும் நற்செய்தி. ●

**26.11.19ல் மதுரை மேரி ஆன் மெட்ரிக்குலேஷன் பள்ளி வளாகத் தில் நடந்த "வாழ்வின் மறுமலர்ச்சி பெருவிழா" நிகழ்ச்சியில் சகோதரர். குரூஸ்திவாகர் அளித்த தேவ செய்தி யிலிருந்து கேட்டறிந்து தொகுத் தளித்தவர் தொகுப்பாசிரியர்**

## ஏழு கேள்விகளைச் சிந்தித்து விடைகாணுங்கள்



**வெளிநாட்டுச் செய்திகள்**

**பிரிட்டனில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்த 15 பேர் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள்.**

பிரிட்டனில் சமீபத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் (HOUSE OF COMMON) கான்சன்வேட்டிவ் கட்சிக்கும் (CONSERVATIVE PARTY) லேபர் கட்சிக்கும் (LABOUR PARTY) நடந்த போட்டியில் கான்சர்வேட்டிவ் கட்சி பெரும் பான்மையை பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. இந்தத் தேர்தலில் பிரிதிபட்டேல் என்ற பெண் உறுப்பினர் உட்பட இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்த (INDIAN ORIGIN) 15 பேர் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்க பட்டிருக்கிறார்கள். இச்செய்தி இயல்பாகவே நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நன்றி: **THE HINDU** 14.12.19

**சிந்தனைக்கு,**

இச்செய்தி இந்தியர்களாகிய நமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக ஊடகங்கள் முக்கிய செய்தியாக அறிவிக்கின்றன. நல்லதுதான். உலகிலேயே பெரும் ஜன நாயக நாடு (LARGEST DEMOCRACY) என்று பெருமையடித்துக் கொள்ளும் நாம் இப்போது எங்கேயிருக்கிறோம்?

1. "மண்ணின் மைந்தன்" (Son of the Soil) என்ற குறுகிய வட்டத்திற்குள் நம்மை அடக்கி கொண்டிருக்கிறோமே, **ஏன்?**

2. நாம் இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். அண்டைய மாநிலத்தினரையே அந்நியராகக் காண்கிறோமே, **ஏன்?**

3. நாம் இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். அண்டைய மாநிலத்திற்கு ஆற்றுத்தண்ணீரைப் பரிவோடு பகிர்ந்தளிக்க முடியவில்லையே, **ஏன்?**

4. நமது அண்டைய வீட்டுக்காரரோடு ஓர் அடி நிலத்திற்கு பிரச்சனை உண்டாக்கி அது பகைமையாக மாறி ஆண்டுக்கணக்காக நீதிமன்றத்தில் போய் நின்றும் அங்கு தீர்வின்றிப் பிரச்சனையை நம்முடைய சந்ததிக்கும் விட்டுச் செல்லு கிறோமே, **ஏன்?**

5. ஒரே மொழி பேசும் ஒரே மாநிலத்தவராயினும் ஜாதிக்கொரு தலைவனை உருவாக்கி, அவருக்கு சிலையமைத்துப் பாலாபிஷேகம் செய்கிறோமே, **ஏன்?**

6. அன்பையும், அஹிம்சையையும், சகோதரத்துவத்தையும் போதித்த புத்தன், காந்தி பிறந்த புண்ணிய பூமி என்று சொல்லிக்கொள்ளுகிற நாம் அவர் களுக்கெல்லாம் சிலையமைத்து தெருவில் நிறுத்திவிட்டு இன்று அவர்களது போதனைகளையெல்லாம் இழந்து நிற்கிறோமே, **ஏன்?**

7. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" என்று மற்றவர்களுக்குச் சொல்லும் நாம் அதைப் கடைபிடிக்க முடிய வில்லையே, **ஏன்?**

●

# கிறிஸ்தியானின் மோட்சப் பிரயாணம்

பாகம் 6

கிறிஸ்தியான், இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தொங்கிய சிலுவைக் காட்சியைக் கண்டான். அவனை அழுத்திக் கொண்டிருந்த பாவச்சுமை முதுகிலிருந்து அறுந்து விழுந்து உருண்டோடியது. பரிசுத்தஆவியின் முத்திரையோடும், முத்திரையிடப்பட்ட தேவனுடைய வார்த்தை அடங்கிய சுருளையும் பெற்றுக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான். வழியில் முத்திரையிட்ட சுருளைத் தொலைத்து விட்டான். எனினும் மிகுந்த சிரமத்தோடு தேடிக் கண்டு பிடித்துக் கொண்டான். பின்பு இடுக்க மான வழியில் இரண்டு சிங்கங்கள் அவனை அச்சுறுத்தியது. ஆனாலும் "சிங்கங்கள் கட்டப்பட்டிருக் கின்றன. இரண்டு சிங்கங்களுக்கு மத்தியில் நீ கடந்து போய்விடலாம்" என்ற சத்தத்தைக் கேட்டுத் தைரிய மடைந்தான். அவைகள் கெர்ஜித் தாலும் அவனைச் சேதப்படுத்த முடியவில்லை. இதைக்குறித்து டிசம்பர் 2019 இதழில் கண்டோம்.

### அலங்கார மாளிகை

கிறிஸ்தியான் கடைசியாக மலை யிலிருந்த அலங்கார வாசலண்டை வந்து சேர்ந்தான். அங்கிருந்த **விழித் திருப்போன்**(Watchful) என்ற காவற் காரனைப்பார்த்து "இடுக்கமான வழியைத் தாண்டிவரவும் சிங்கங் களின் அச்சுறுத்தலுக்குத் தப்பி வரவும், என்னை உற்சாகப்படுத்தி யதற்கும், எனக்கு குரல் கொடுத்த தற்கு மிக்க நன்றி. நான் அழிநகரத்தி லிருந்து நித்தியநகரமாகிய மோட்சத் திற்குச் செல்லும் பயணி" என்று தன்னையும் அறிமுகப்படுத்தி அவனுக்கு நன்றி கூறினான். "இந்த மாளிகை, சீயோனை நோக்கிப் பயணம்செய்வோர் களைத்து வரும் போது இளைப்பாறுதலளிக்கவே கட்டப்பட்ட மாளிகை. இந்த மாளி கையை நான்கு சகோதரிகள் பரா மரித்து வருகின்றனர். அவர்கள் **விவேகம், முன்யோசனை, பக்தி, கருணை** (Discretion, Prudence, Piety and Charity) ஆகியோர். நான் அவர்களை அழைக்கிறேன். உன் பேச்சில் உண்மை இருக்குமானால் உன்னை இங்கே தங்க அனுமதிப் பார்கள்" என்று சொல்லி அவர்களுக் கான அழைப்புமணியை அடித்தான். விவேகம் (Discretion) என்ற சகோதரி வெளியே வந்து கிறிஸ்தி யானைக்குறித்து விசாரித்தார்கள். கிறிஸ்தியான் தான் கடந்து வந்த பாதைகளைக் குறித்தும், வழியில் தனக்குச் சம்பவித்தவைகளைக் குறித்தும் விவரித்தான். அதைக் கேட்ட விவேகம் கிறிஸ்தியானை உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவனுக்கு நல்ல சத்தான உணவும், தரமான திராட்சரசமும் கொடுத் தார்கள். உணவுவேளையின் போது அந்த சகோதரிகள் கிறிஸ்துவின் சிலுவைக் காட்சியை நினைவு கூர்ந்து உலகத்தின் பாவத்திற்காகத்

தன் ஜீவனையே தியாகம் செய்த இயேசுவின் அன்பைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். கிறிஸ்தியான், தான் **பொருள் கூறுபவர்** (Interpreter) வீட்டில் பெற்ற அனுபவங்கள், சிறு குன்றின் மேல் சிலுவைக் காட்சியைக் கண்டு வியந்து நின்ற போது தன் பாவச் சுமை நீக்கப்பட்டதையும் தான் சந்தித்த அனைத்தையும் குறித்து அவர்களோடு பகிர்ந்து கொண்டான். இரவு தங்குவதற்கு அவனுக்கு **சமாதானம்**(Peace) எனும் மேலறையைக் கொடுத்தார்கள். அதிகாலை சூரியன் உதித்து ஒளிக்கதிர்கள் அந்த அறைக்குள் வந்த போது தனக்கு முன்னுள்ள நீண்ட வழியைக் கண்டான்.

மறுநாள் காலை அந்த சகோதரிகள் மாளிகையிலுள்ள ஒவ்வொரு அறைக்கும் கிறிஸ்தியானை அழைத்துச் சென்று காட்டினார்கள். முதலாவது அறை ஒரு நூலகம் போன்று அமைந்திருந்த படிக்கும் அறை. அங்கே அநேக அபூர்வமான புத்தகங்கள் இருந்தன. ஒரு பெரிய புத்தகத்தைக் காட்டினார்கள். அதில் இயேசுகிறிஸ்துவின் வம்சவழி எழுதப்பட்டிருந்தது. அவர் நித்திய மான தேவனின் குமாரன். அந்த குமாரனும் நித்தியர். அவர் அனாதி தலைமுறையாய் தோன்றியவர் என்பது பற்றிய பதிவுகள் இருந்தன. அவர் செய்த அதிசயமான செயல்களைக் குறித்தும் அவர் தமது ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் பெயர்களையும், அவர்கள் ஊழியத்தில் அவர்கள் செய்த அநேக காரியங்களும் எழுதப்பட்டிருந்தன. அவர்கள் எப்படி இராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள். நீதியைச் செய்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டார்கள், சிங்கத்தின் வாயை அடைத்துப் போட்டார்கள் மற்றும் இன்னும் பலரைக் குறித்தப் பதிவுகளைக் கண்டு கிறிஸ்தியான் புரிந்து கொண்டான்.

பின்பு கிறிஸ்தியானை ஆயுத சாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே ஆண்டவர் மோட்சப் பயணிகளுக்கென்று வைத்திருக்கும் பட்டயம், கேடகம், தலைச்சீரா, மார்க்கவசம், மற்றும் பழுதடைந்து போகாத பாதரட்சை ஆகியவைகளைக் கண்டான். தேவனுடைய இராஜ்ஜியத்தின் நிமித்தம் பணியில் இறங்கும் அத்தனை பேருக்கும் கொடுப்பதற்குப் போதுமான ஆயுதங்கள் இருப்பதைக் கண்டான். மற்றுமொரு அறைக்குள் சென்ற போது சிலர் உபயோகித்த ஆச்சரியமான செயற்கருவிகளும் வைக்கப் பட்டிருந்தன. மோசேயின் கோல், யாகேல், சிசெராவைக் கொல்ல பயன்படுத்திய ஆணி சுத்தியல், கிதியோனின் படையாளிகள் கொண்டு சென்ற பானைகள், எக்காளங்கள், தீவட்டிகள், தாவீது கோலியாத்தை நெற்றியில் கல்லடித்துக் கொன்ற கவண் ஆகியவைகள் வைக்கப் பட்டிருந்தன. பின்னர் அந்த சகோதரிகள் கிறிஸ்தியானை அரண்மனையின் மேல்தளத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து

2

தூரத்தில் தெரிகிற மகிழ்ச்சி மலையைக் காட்டினார்கள். அது பரதீசிலிருந்த தோட்டத்தைப் போல இருந்தது. அழகான மலைப்பிர தேசம். கனிதரும் பலவிதமான மரங்கள், திராட்சைத் தோட்டங்கள், பார்ப்பதற்கு அழகான மரங்கள், பூத்துக் குலுங்கும் வண்ணப்பூக்கள் ஆகியவை காண்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தன. அந்த மலையைச் சென்றடைவதற்கு **தாழ்மை என்னும் பள்ளத் தாக்கைக்** (Valley of Humility) கடந்து ஒரு நீண்ட பயணம் மேற் கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தி யானுக்குச் சொன்னார்கள்.

கிறிஸ்தியானும் வழியில் எதிர் படும் ஆபத்துக்களைச் சந்திக்க ஆயுதசாலையிலிருந்து சர்வாயுத வர்க்கத்தையும் அணிவித்து, உணவும் கொடுத்து அனுப்பி வைத் தார்கள். அவன் வெளியே வந்ததும் காவற்காரனிடம், "இந்த வழியாக வேறு யாரும் கடந்து சென்றார் களா?" என்று கேட்டான். "ஆமாம், உண்மையானவன் என்பவர் இந்த வழியாகக் கடந்து சென்றான். அவன் இந்நேரம் மலையின் மறுபுறம் இறங்கியிருப்பான்" என்று காவற் காரன் பதிலளித்தான். "உண்மை யானவனா? அவன் என் வீட்டிற்கு அருகில் வசித்தவன் தான். நான் துரிதமாகச் சென்று அவனை நெருங்கி விடுவேன் என்று துரிதப் பட்டான். அந்தச் சகோதரிகள் மலை யின் அடிவாரம் வரை கூடச் சென்று கிறிஸ்தியானை அனுப்பி வைத் தார்கள். அவன் தாழ்மையின் பள்ளத் தாக்கில் இறங்கி பின் மலையேற வேண்டுமாகையால் வழியில் களைத்து விடக்கூடாது என்று கருதி அவனுக்கு அப்பமும், திராட்சரசமும், உலர்ந்த திராட்சையையும் கொடுத் தனுப்பினார்கள். தாழ்மையின் பள்ளத்தாக்கை நோக்கி கிறிஸ்தியான் பயணத்தைத் தொடங்கினான்.

## நாம் கற்றுக்கொள்வது

கிறிஸ்தியான் இரட்சிக்கப்பட்ட வுடன் அவனுக்கு பரிசுத்தஆவியின் முத்திரையும், தேவனுடைய வார்த்தை எனும் புத்தகச்சுருளும் கொடுக்கப்பட்டன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கிறிஸ்தியானின் வாழ்க்கையை நாம் நோக்கிப் பார்க்கும்போது இரட்சிக்கப்பட்ட பின்பும் அவன் செல்லவேண்டிய ஒரு நீண்ட பயணமிருக்கிறது என்ப தையும் நாம் விளங்கிக் கொள்ளு கிறோம். தேவனுடைய வார்த்தை எனும் புத்தகச்சுருள், கிறிஸ்தியானின் பயணத்திற்கான வரைபடம். மலை ஏறுவது என்பது எளிதான காரிய மல்ல. வழியில் ஆபத்துகள் உண்டு என்று அறிந்திருந்தாலும் அவனுக் கிருந்த புதிய விசுவாசம் ஆபத்து களை எல்லாம் தாண்டி மலை யிலுள்ள அலங்கார அரண்மனைக்கு வந்து சேர அவனுக்கு உதவியது.

அலங்கார அரண்மனை கிறிஸ்தி யான்கள் போன்ற மோட்சப்பயணி களின் ஆத்துமாக்களுக்கு ஒரு நல்ல அடைக்கலம். ஆண்டவரின் ஆழ மான காரியங்களை அறிந்து கொள்ள இதுபோன்ற பத்திரமான தங்குமிடங்

களை ஆண்டவர் நமக்கு உருவாக்கித் தருகிறார். **விவேகம், முன்யோசனை, பக்தி, கருணை** (Discretion, Prudence, Piety and Charity) எனும் நான்கு சகோதரிகள் கிறிஸ்தியானை அலங்கார அரண்மனையில் தங்கவைத்து நல்ல அறிவுரைகளை கூறினர். நாம் இரட்சிக்கப்பட்ட பின் நாம் அந்த நற்பண்புகளை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே ஆண்டவருடைய எதிர்பார்ப்பு. இரட்சிப்பு ஏதோ ஒரு நேரம் அருளப்படுவதல்ல. அதில் வளர்ச்சி தேவை. அது தொடருகிற காரியம். நம்முடைய நற்கிரியைகளைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட முடியாது. இயேசு தமது கிருபையால் நம்மை இரட்சிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுவைத் தங்களில் பிரதிபலிப்பவர்களாக இருக்கவேண்டும்.

முதலாவதாக ஒரு கிறிஸ்தவனுக்கு விவேகம் அவசியம். ‘‘ஒரு முறை இரட்சிக்கபட்டாலே போதும், அது எப்பொழுதும் நிலைத்து நிற்கும்’’ என்று இரட்சிப்பின் வளர்ச்சியை முடக்கும். வஞ்சனையான உபதேசங்களை சாத்தான் கொண்டு வருவான். அதைப்பகுத்தறிந்து கொள்ள விவேகம் அவசியம். தேவனோடு எப்பொழுதும் நெருங்கிய உறவை வலுப்படுத்திக் கொள்ள பக்தி இன்றியமையாத காரியம். எல்லா ஞானத்தோடும் எளிமையான வாழ்வு வாழ முன்யோசனை அவசியம். கடைசியாக ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் நம்மில் நிறைவேற பொறுமை மிக அவசியம். ஓர் இரவில் எல்லாம் நமக்கு கிடைத்து விடாது.

ஆண்டவர் யார், வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது போல அவர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை அறிந்து கொள்ள தினந்தோறும் வேதத்தை நாம் தியானிக்க வேண்டும் என்பதைத்தான் அலங்கார அரண்மனையின் வெவ்வேறு அறைகளில் கண்டவைகள் வெளிப்படுத்துகின்றன. அதோடு மட்டுமின்றி கடந்த காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலமாக எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கங்களை அணிந்து கொள்ள வேண்டும். இரட்சண்யம் எனும் தலைச்சீரா, நீதி எனும் மார்க்கவசம், சத்தியம் எனும் கச்சை, நற்செய்தியை அறிவிக்கும் ஆயத்தமெனும் பாதரட்சை, விசுவாசமெனும் கேடகம், தேவனுடைய வசனம் எனும் பட்டயம் ஆகியவைகள் தேவையானவைகள். அலங்கார அரண்மனையிலுள்ள நான்கு சகோதரிகள் கிறிஸ்தியானுக்கு சத்தான உணவைக் கொடுத்தது போல நமது நீண்ட பயணத்திற்கு நமது சரீரமும் பலப்படவேண்டும். கிறிஸ்தியான் தாழ்மையின் பள்ளத்தாக்கில் இறங்கியது போல நாமும் பயணத்தைத் தொடருவோம்.

- தொடரும்

சகோதரி.லாரா டெலனோ
lauradelano@yahoo.com



# ஜான் பிராட்ஃபோர்ட்

''நான் யாருக்கேனும் அநியாயம் செய்திருந்தால் மிகுந்த தாழ்மையோடு மன்னிப்பு கோருகிறேன், எனக்கு அநியாயம் செய்தவர்களையும் நான் மன்னிக்கிறேன்''

- ஜான் பிராட்ஃபோர்டின் கடைசி வார்த்தைகள்

ஜான் பிராட்ஃபோர்ட் சிறந்த கல்வியாளர். நல்ல எழுத்தாற்றலும், பேச்சுத் திறனும் மிக்கவர். மேலும் நிதி தொடர்பான தணிக்கையாளர் (Auditor). அவரது திறனைக் குறித்துக் கேள்வியுற்ற இங்கிலாந்தின் மன்னர் எட்டாம் ஹென்றி (Henry VIII) இங்கிலாந்து இராணுவத்தில் நிதித்தணிக்கையாளராக நியமித்தார். அந்தக் காலகட்டத்தில் இலண்டன் இன்னர் டெம்பிள் (Inner Temple) சட்டக்கல்லூரியில் பகுதிநேர மாணவராகவும் சட்டம் பயின்றார். கத்தோலிக்கப் பின்னணியில் வாழ்ந்தாலும் சீர்திருத்த சபை விசுவாசத்தில் (Protestant Faith) பிடிப்பு ஏற்பட்டக் காரணத்தால் சட்டப்படிப்பை விட்டுவிட்டு புனித கேதரின் கல்லூரியில் இறையியல் (Theology) படித்தார். இறையியல் படிக்கும் போதே இறை வார்த்தையின்படியே தூய்மையான வாழ்வு வாழ்ந்தார். ஆகவே அவர் ''தூய'' பிராட்ஃ போர்ட் (Holy Bradford) என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டார். அவரது அசாத்தியமான பிரசங்கிக்கும் திறனை அறிந்த அடுத்து வந்த மன்னர் ஆறாம் எட்வர்ட் (Edward VI) அரண்மனை சிற்றாலய குருவாக (Chaplain) அவரை நியமித்தார். 1553இல் மன்னர் எட்வர்ட் மரணத்தை அடுத்து இராணி மேரி டியூடர் (Mary Tudar) அரியணைக்கு வந்தார். இராணி மேரி டியூடர், ஜான் பிராட்ஃபோர்ட் சபையின் பாரம்பரியமாக நம்பி வந்த கத்தோலிக்க உபதேசத்திற்கும் முற்றிலும் முரண்பாடானவைகளைப் போதிக்கிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலும், மக்களை கலகத்திற்கு ஆயத்தப்படுத்துகிறார் (Trying to stir up a mob) என்ற குற்றச்சாட்டிலும் லண்டன் டவர் (Tower of London) சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த காலத்தில் உலக கிறிஸ்தவர்களின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு தனது எழுத்தாற்றலைக் கொண்டு எழுத ஆரம்பித்தார். அவரைப் போலவே சீர்திருத்த சபை விசுவாசத்தைக் கொண்டு சபையைச் சீர்திருத்த முயன்ற ஆர்ச் பிஷப் தாமஸ் கிரான்மர், ரிட்லே மற்றும் லாட்டிமர் ஆகியோர் சிறையில் ஒரே அறையில் அடைக்கப்பட்டனர். அது அவர்களுக்கு புதிய ஏற்பாட்டை உன்னிப்பாக ஆராய்ந்து அறியவும் அதை மற்றவர்களுக்கு எழுதிப் போதிக்கவும் வாய்ப்பாக அமைந்தது. சிறையில் கொடூரக் குற்றங்கள் புரிந்த கொள்ளையர்கள், கொலைகாரர்கள் ஆகியோருக்கு

போதிக்க ஆரம்பித்தார். சிறைவாசி களின் நல்ல மாற்றத்தைக் கண்ட சிறை அதிகாரிகள் அவரைப் பரி வோடு நடத்தினார்கள்.

ஆனாலும் இராணி மேரி டியூடர், ஜான் பிராட்ஃபோர்ட் விஷயத்தில் மிகக்கடுமையாகவே இருந்தாள். ஒன்றரை வருடக் காலத்திற்குப் பின்னர், அவர் தன்னுடைய நம்பிக் கைகளை மறுதலிப்பாராயின் அவருக்கு மன்னிப்பு அருளப் படலாம் என்று அதிகாரிகள் தெரிவித் தனர். அவரோ அதற்கு மறுத்து விட்டார். இன்னும் ஆறு மாதங் களுக்குப் பின்னரும் அவரிடம் அவ்விதமே கூறப்பட்டது. அப்போதும் அவர் மறுத்துவிட்டார். அவருடைய நண்பர்கள் அவரிடம், "நீர் கொஞ்சக் காலம் கூட உயிரோ டிருந்து ஆண்டவருடைய சேவையைத் தொடரும்படி ஏதா யினும் ஒன்று செய்யத்தான் வேண்டும். நீர் விசுவாசிக்கும் உபதேசங்களைக் குறித்து மேரி அரசியின் அவையிலுள்ள உபதேச வல்லுனர் உமக்கு பாதுகாக்க உதவுவார்" என்று கூறினர். ஜான் அவர்களிடம் "நான் அவ்விதம் செய்வேனேயாயின், நான் இது வரை விசுவாசித்து உபதேசித்து வருகிற உபதேசங்களை நான் இப்போது சந்தேகிக்க ஆரம்பித் திருக்கிறேன் என்று மக்கள் எண்ணு வார்கள். நான் அவற்றைச் சற்றா கிலும் சந்தேகிப்பதில்லையே!" என்று கூறினார். அவருடைய சிநேகிதர்கள், "சீக்கிரம் அவர்கள் உம்மைக் கொன்றுபோடுவார்களே" என்று கண்ணீருடன் கூறினர். அவர்கள் இவ்விதம் கூறியதற்கு அடுத்த நாள் மரண தண்டனைக் கானத் தீர்ப்பு அவருக்கு அளிக்கப் பட்டது. சிறைச்சாலைக் காவலர் ஒருவரின் மனைவி அதை அவருக்கு அறிவித்தாள்.

பிராட்ஃபோர்ட் பரலோகத்திற்கு நேராகத் தன் கண்களை ஏறெடுத்து, "ஆண்டவரே, இதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். வெகுகாலமாக இதற்காக நான் காத்திருக்கிறேன். கர்த்தாவே, நான் உம்மண்டை வந்து சேர என்னை இதற்குத் தகுதிப் படுத்தும்" என்று ஜெபித்தார். நடை பெற்றுக் கொண்டிருந்த இச்சம்பவங் களைப் பொது மக்கள் அறிந்துவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் நடு இரவில் அவரை அந்தச் சிறைச் சாலையிலிருந்து நியுகேட் சிறைச் சாலைக்கு அதிகாரிகள் இடமாற்றம் செய்தனர். எனினும் இச்செய்தி எல்லா இடங்களிலும் பரவியது; எனவே தங்கள் போதகரை அவருடைய இரத்தசாட்சி மரணத்திற்கு முன்னர் சந்திக்கும்படியாக அநேகர் அவ் விடத்தில் கூடி வந்து விட்டனர். அவருக்காக ஜெபித்த அநேகர் வெளிப் படையாகக் கதறி அழுதனர். அவரோ ஆழ்ந்த அமைதலும், நிதானமும் உள்ளவராயிருந்தார். அவர்களுக்கு இறுதியாக அவர் வாழ்த்துதல் கூறினார். அவர்களுக்காகவும் அவர் களுடைய வருங்காலத்திற்காகவும் அவர் ஊக்கமாக ஜெபித்தார்.

31.1.1555இல் ஸ்மித் பிஃல்டு என்னுமிடத்தில் அதிகாலை நான்கு மணிக்கு பிராட்ஃபோர்ட் சுட்டெரிக்கப் பட வேண்டிய அந்த இடத்தில் பெருங்கூட்ட மக்கள் கூடிவிட்டனர். முடிவாக, ஒன்பது மணிக்கு ஆயு தங்கள் தரித்த காவலர்கள் அவரைச் சுட்டெரிப்பதற்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த அந்த இடத்திற்கு அவரை அழைத்து வந்தனர். மார்லெட் என்ற பெண்மணி பிராட்ஃ போர்டுக்கு மிகவும் அறிமுகமான வர்கள். சிறையிலிருந்த காலத்தில் அவர்களுக்கு அநேகப் பக்திக் கடிதங்களை எழுதியுள்ளார். அப் பெண்மணி கையால் நெய்யப்பட்ட "ஜுவாலிக்கும் மேலாடை" (Shirt of Flame) ஒன்றை பிராட்ஃபோர்டுக்கு அவரது தண்டனை நிறைவேற்றப் படுவதற்கு சற்று முன்பாகக் கொண்டு வந்து கொடுத்தாள். அது திருமண நிகழ்ச்சியின் போது அணி கிற ஒரு மேலாடையாகும். மரண வேளையில் அவர்களைக் கௌரவப் படுத்தும் வகையில் அணிவிக்கும் மேலாடையாகும். இது மரிப்பவர் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றிவிட்டார் என்ற அர்த்தத்தில் கொடுக்கப்படு வதாகும். (Their oneness with christ) பிராட்ஃபோர்ட் அதை வாங்கி முத்தமிட்டார். இச்செயல் அவர் மரிக்க ஆயத்தமாயிருப்பதாக தெரியப்படுத்தும் செயலாகும். அவருடன் கூட, தன் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்த இளைஞனாகிய ஜான் லீஃபும் (John Leaf) கொண்டு வரப்பட்டார். இருவருமே முழங்காற் படியிட்டு ஒரு மணி நேரம் ஜெபித் தனர். இருவரும் இரும்பு கம்பத்தில் சங்கிலியால் பிணைக்கப்பட்டனர்.

பிராட்ஃபோர்ட் தன்னைச் சுட் டெரிக்கும்படியாக அடுக்கப்பட்டிருந்த விறகுத் துண்டு ஒன்றினையும், அவர்கள் அவரைக் கட்டும்படியாக அங்கு நிறுத்தியிருந்த இரும்புக் கம்பத் தையும் முத்தமிட்டார். பின்னர் தனக்கு முன் நின்றுகொண்டிருந்த திரள் கூட்டத்தாரை நோக்கி அவர் உரத்த சத்தத்துடன், **"இங்கிலாந்தே, உன் பாவங்களைக் குறித்து மனம் வருந்தி மனந்திரும்பு; விக்கிரகாரா தனையைக் குறித்து எச்சரிக்கை யாயிரு; கள்ளப் போதகர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிரு; அவர்கள் உன்னை வஞ்சித்து விடாதபடி கவனமாயிரு. என்னை சிறைப்படுத்தி உயிரோடு சுட் டெரிக்கத் திட்டமிட்டவர்களை நான் மனப்பூர்வமாக மன்னிக்கிறேன்"** என்று கூறினார்.

ஜான் லீஃபைப் பார்த்து "சகோ தரனே, திடன்கொள். இன்று இரவு ஆண்டவராகிய இயேசுவோடு நாம் மனமகிழ்ச்சியுடன் விருந்துண்ணப் போகிறோம்" (Be of good comfort brother, for we shall have a merry supper with Jesus Christ this night) விறகு நெருப்பு பற்றவைக்கும்போது கூடியிருந்தோரைப் பார்த்து **"நான் யாருக்கேனும் அநியாயம் செய் திருந்தால் மிகுந்த தாழ்மையோடு மன்னிப்பு கோருகிறேன்.**

- தொடர்ச்சி 28ம் பக்கம் பார்க்க...

# நீதியின் விளைச்சலை வர்த்திக்க விரும்புகிறீர்களோ?

பவுல் கொரிந்து சபைக்கு கொடுத்தலைப் பற்றி போதிக்கும் போது "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கப் பண்ணுவார்" என்று எழுதுகிறார் (2 கொரி.9:10). மேலும் **"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்"** என்று தாவீதின் 112:9-ம் சங்கீதத்தை மேற்கோள் காட்டி கொடுத்தலை நீதி என்று சுட்டிக்காட்டுகிறார். தேவனுடைய இராஜ்யத்தை இந்த பூமியில் கட்டுவதற்கு கொடுத்தலை முதலீடு செய்யும்போது அதன் விளைவான நீதியின் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுவோம். அது என்றென்றைக்கும் நிலைநிற்கும் நீதி. ஆகவே தேவனுடைய இராஜ்யத்தை கட்டுவதற்குக் கர்த்தருக்குக் கொடுப்பது மிக முக்கியமான ஒன்றாகும். கர்த்தருக்குக் கொடுப்பது என்றால் என்ன? ஏன் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்? எப்படிக் கொடுக்க வேண்டும்? எங்கு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**1. கொடுத்தல் என்றால் என்ன? கொடுத்தலின் ஆரம்பம் எது? முதன் முதலில் யார் யாருக்கு கொடுத்தார்கள்?**

கொடுத்தல் என்பது தகுதியற்ற, திரும்பக் கொடுக்க முடியாத ஒருவருக்கு விலையுயர்ந்த ஒன்றைப் பரிசாகக் கொடுப்பதாகும். ஆதி.1:28இல் தேவன் தான் படைத்த பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் தன்னால் படைக்கப்பட்ட மனிதனின் கரத்தில் கொடுத்து அதின் மேல் அவனுக்கு ஆளுகையைக் கொடுத்தார். அதாவது **இந்த உலகத்தையும் அவற்றில் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்தையும் மனிதனுக்கு ஈவாக முதன்முதலில் தேவனே கொடுத்தார்.** கொடுத்தலின் முன்மாதிரியாக முதல் முதலாக செய்து காட்டியவர் தேவன்தான். மனிதன் பாவத்தில விழுந்தவுடன் அவனை மீட்பதற்கு தன்னுடைய சொந்தக் குமாரனையே கொடுப்பேன் என ஆதி.3:15இல் அவர் வாக்குரைத்த படியே இயேசு கிறிஸ்துவை இந்த உலகில் அவதரிக்கச் செய்து நமக்காகப் பலியாக்கினார். **கொடுத்தலில் தன் ஜீவனையே கொடுத்து முன் மாதிரியை வைத்தவர் தேவன் தான்.** புதிய ஏற்பாடு அதை உறுதி செய்கிறது-யோவா.3:16இல் **"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"** என்று வாசிக்கிறோம்.

**2. மனிதனைப் படைத்த தேவன் அவனிடம் எதை எதிர்பார்த்தார்?**

ஆதி.2:15இல் "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்துவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்". "பண்படுத்துதல்" அல்லது "காத்தல்" என்ற பதத்திற்கு பயன்படுத்தப் பட்டுள்ள எபிரேய பதம் "ஆபாத்" ஆகும். இந்த "ஆபாத்" என்ற பதத்திற்கு "சேவி", "ஆராதி" என்ற அர்த்தங்களும் உண்டு. நமக்கெல்லாம் தெரிந்த பழமொழி - "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்று சொல்வார்கள். இந்த உலகத்தையே மனிதனுக்கு கொடுத்த தேவன் தன்னை வணங்குவதற்காக மனிதனைப் படைத்து, அவனை ஏதேன் தோட்டத்தில் கொண்டு வந்து வைத்தார். இதை இன்னும் சற்றுத் தெளிவாக ஏசாயா.43:21இல், **"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்"** எனப் பார்க்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்தீரியிடம், "உண்மையாய் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது" என்று (யோவா.4:23)இல் கூறினார். எனவே கர்த்தரைத் தொழுது அவருக்கு ஆராதனை செய்வதையே ஆண்டவர் மனிதனிடம் எதிர்பார்த்தார், தொடர்ந்து எதிர்பார்க்கிறார்.

**3.ஆதிப்பிதாக்கள் கர்த்தரை எப்படித் தொழுதுகொண்டார்கள்?**

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நமக்கு என்ன சந்தேகம் வந்தாலும், பழைய ஏற்பாட்டை நாம் திருப்பிப் பார்க்க வேண்டும்! முதன் முதலில் தேவனைத் தொழுது கொண்ட காயீனும், ஆபேலும் தேவனுக்கு காணிக்கை செலுத்தி தேவனைத் தொழுது கொண்டார்கள் (ஆதி.4:1-4). ஆதிப் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, நாடோடிகளாய் எங்கு சென்றாலும் பலிகளைச் செலுத்தி கர்த்தரைத் தொழுது கொண்டனர். ஆண்டவர் மோசேயிடம், **"வெறுங் கையாய் ஒருவனும் என் சந்நி தியில் வரவேண்டாம்"** என்று (உபா.16:17) இல் சொன்னார். யாத்.25:1,2ல் "கர்த்தர் மோசேயை நோக்கி, இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக!". ஆகவே இந்த உலகையே மனிதனிடம் கொடுத்த ஆண்டவருக்கு ஆதிப்பிதாக்கள் தங்களிடத்தில் இருந்த சிறப்பானதொன்றை காணிக்கையாகச் செலுத்தித் தொழுது கொண்டார்கள்.

**4.தசமபாகம் வேறு? காணிக்கை வேறா? அல்லது இரண்டும் ஒன்றா?**

தசமபாகமும், காணிக்கையும்

ஒன்றல்ல. வருமானத்தில் பத்தில் ஒன்றைச் செலுத்துவது தசமபாகம் ஆகும். ஆதிப்பிதாக்கள் தேவனை ஆராதிக்கும் பொழுது காணிக்கை கொடுத்தார்கள். தேவனுக்கு நன்றி செலுத்தும்போது தசமபாகம் செலுத்தினார்கள். காணிக்கைக்கு அளவில்லை - எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். தசமபாகத்திற்கு அளவு உண்டு - அது ஆண்டவர் ஆசீர்வதித்ததிலிருந்து 10 சதவீதம், காணிக்கை என்பது விதைப்பதற்கு சமமானது - அதற்கு நிச்சயமாய் பலன் உண்டு. எனவே காணிக்கை என்பது பலன் கிடைப்பதற்கு முன்பே செலுத்தப்படுவதாகும். பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை பற்றியும், ஆசாரியர் மற்றும் லேவியர்களுக்கு செலுத்த வேண்டிய தசமபாகத்தைப் பற்றியும், இன்னும் ஏழைகளுக்கு கொடுத்தல், ஆலயத்திற்கு செலுத்தப்படும் வரிகள் பற்றி நாம் காண முடியும்.

**5. யூதர்கள் எவ்வளவு தசமபாகம் கொடுத்தனர்?**

**(1) யூதர்கள் தங்கள் விளைச்சலிலிருந்து ஆண்டுதோறும் 10% தசமபாகம் லேவியருக்கு கொடுத்தனர்.**

லேவி.27:30 தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. எண். 18:21 இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன். தசமபாகம் வாங்கும் லேவியன் தசமபாகம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படவில்லை. எண்.18:26. நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக் கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது, தசமபாகத்தில் பத்தில் ஒருபங்கைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்.

**(2) யூதர்கள் தங்கள் விளைச்சலிலிருந்து ஆண்டுதோறும் 10% தசமபாகத்தைப் பண்டிகைகளை ஆசரிக்கும்படி ஆலய வரியாகக் கொடுத்தனர்.**

உபா.14:22,23 வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசம பாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக.

**(3) யூதர்கள் மூன்று ஆண்டுக்கு**

**ஒருமுறை 10% தசமபாகத்தை ஏழைகளுக்காகவும் திக்கற்றவர் களுக்காகவும் செலவு செய்தனர்.**

உபா.14:28,29 மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய். லேவியனுக்கு உன்னோடே பங்கும், சுதந்தரமும் இல்லாதபடியினால், அவனும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். (இதையே இஸ்லாமியர் 'ஜக்காத்' என்ற பெயரில் தங்கள் வருமானத்தில் வருடத்திற்கு 3 சதவீதம் எடுத்து வைத்து ஏழைகளுக்குக் கொடுக்கின்றனர்)

**(4) தசமபாகம் தவிர வேறு எதற்கெல்லாம் யூதர்கள் கொடுத்தனர்?**

(1) ஆசரிப்புக் கூடாரம் கட்ட மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள் யாத்.25:1-8.

(2) தேவாலயம் கட்ட மனப்பூர்வமாய் கொடுத்தார்கள் 1 நாளா.29:5-9, எஸ்றா.1:5-6.

(3) இன்னும் முதற்கனிகள் (உபா.26:2) பொருத்தனைக் காணிக்கைகள் (1 சாமு.1:28) விசேஷித்த காணிக்கைகள், ஸ்தோத்திர காணிக்கைகளையும் அவ்வப்போது கொடுத்தார்கள். - தொடரும் ●

- **Pas.Sam Ramalingam, Mo:**9443423660 / 8610844461

---

24ம் பக்கத் தொடர்ச்சி....

**எனக்கு அநியாயம் செய்தவர்களை நான் மன்னிக்கிறேன்"** என்றார். அதுவே அவருடைய கடைசி வார்த்தைகள் (I beg for forgiveness of any he had wronged, and offer forgiveness to those who wronged me) என்று அவர் கூறினார். இருவரும் சற்று நேரத்திற்குள் அக்கினிக்கு இரையாயினர். சுவிசேஷத்தின் விரோதிகள் அக்காலத்தில் எத்தனை அதிகமாய் இத்தகைய செயல்களை சுவிசேஷகர்களுக்கு செய்தார்களோ அத்தனை அதிகமாய் சுவிசேஷத்தின் அக்கினி அநேகரைப் பற்றிப் பிடித்தது! சுவிசேஷம் இன்னும் அதிகமாகப் பரவுவதற்கும், அநேகர் ஆண்டவராகிய இயேசுவுக்காகத் தங்கள் ஜீவியத்தை அர்ப்பணிப்பதற்கும் அது ஏதுவாயிற்று! ●

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான்.12:24) என்று நமதருமை ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கிறாரே!**

**நன்றி:** "பெந்தெகோஸ்தின் பேரொலி" டிச.2019 மற்றும் இணையதளத் தகவல்

## யார் என் நுகத்தடியை முறித்து விடுவிக்க முடியும்?

ஈசாக்கு கண்பார்வையற்ற நிலையிலிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி ஈசாக்கின் இளைய குமாரனாகிய யாக்கோபு தன் மூத்த சகோதரனாகிய ஏசாவிற்கு உரிய சேஷ்டபுத்திரபாகத்தை ஏசாவைப்போல் வேஷமிட்டு, தான் ஏசா என்று ஏமாற்றி அபகரித்துக் கொண்டான். இந்த பேரிழப்பின் விளைவாக யாக்கோபுக்கு விரோதமாக ஏசாவின் கொலை மிரட்டல் (Threat of Fraticide) ஒருபுறம். ஏசா, ஏத்தின் குமாரத்தியை திருமணம் செய்துகொண்டதின் காரணமாக தாயாகிய ரெபெக்காளுக்கு ஏற்பட்ட மனநோவின் (Depression) விளைவாக உயிரையே மாய்த்துக் கொள்ளலாமா என்ற உணர்வுகள் மேலோங்கி (Suicidal Tendancy) குடும்பத்தில் பெரும் கசப்பை உருவாக்கிற்று. ஒரு பெரும் செல்வந்தனின் வீடு சமாதானத்தை இழந்து கசப்பான உணர்வோடு இருக்கும் பரிதாப நிலையைப் பாருங்கள்.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில்தான் ரெபெக்காளின் சகோதரனாகிய லாபானின் குடும்பத்தில் பெண் கொள்ளும்படி கட்டளையிட்டு ஈசாக்கு யாக்கோபை சீரியா தேசத்திலுள்ள பதான்அரானுக்கு தாங்கள் வாழ்ந்த கொண்டிருந்த பெயர்செபாவை விட்டு அனுப்பிவிட்டான் (ஆதி.28:2,5). உன் சகோதரனின் கோபம் தணியுமட்டும் சிலநாள் நீ அங்கே இரு, நீ அவனுக்கு செய்ததை அவன் மறந்த பின், **நான் ஆள் அனுப்பி அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன் என்று வாக்களித்து அனுப்பிவிட்டான்** (ஆதி.27:44,45). யாக்கோபு எப்படி அனுப்பப்பட்டான்? பெரும் செல்வந்தனின் மகன் தன்னந்தனியனாக, வெறுங்கையனாக கால்நடையாக அனுப்பப் பட்டான். தகப்பன் வீட்டில் எத்தனையோ ஒட்டகங்கள், கழுதைகள், வேலைக்காரர்கள் உண்டு. எனினும் எந்த உதவியுமற்ற தனியனாக அனுப்பப்பட்டான். பெயர்செபாவிலிருந்து பதான் அரானுக்கு 772 கிலோமீட்டர். பெயர்செபா நீர்வளமிக்க செழிப்பான இடம். பதான் அரான் என்ற எபிரேய சொல்லுக்கு நுகத்தடி (Yoke) என்று அர்த்தம். வண்டியில் அல்லது உழுவடை ஏரில் இழுத்துச் செல்லத்தக்கதாக காளையின் கழுத்தில் ஒரு கட்டையோடு கட்டிவிடுவார்கள். கயிற்றால் கட்டி இணைத்து விட்டால் காளைகளால் ஒன்றும் செய்ய முடியாது. அந்த அழுத்தத்தோடு இழுத்துச் செல்லவேண்டும். யாராவது நுகத்தின் கட்டை அவிழ்த்து விட வேண்டும். அவிழ்த்து விடமுடியாவிட்டால் நுகம் உடைக்கப்பட்டுத்தான் விடுவிக்கப்பட முடியும். ஆகவே செல்வச் செழிப்போடு வாழ்ந்த யாக்கோபு இப்பொழுது ஒரு அடிமையாக நுகத்தடிக்குள் செல்லுகிறான். எதிர்காலம் நம்பிக்கையற்றதாயிருக்கிறது. ஆனாலும் கனத்த இருதயத்தோடும், கண்ணீரோடும் பயணத்தைத் தொடருகிறான். இப்படிப்பட்ட நிலவரத்தை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா? கலங்காதிருங்கள். **கர்த்தர் உங்களைக் காண்கிறவராயிருக்கிறார்**.

பயணத்தில் இரவுவேளை வந்தது. ஒரு இடத்தில் அவன் தங்கினான். அது கற்கள் நிறைந்த கரடுமுரடான இடம். ஒரு கல்லைத் தலையணையாக வைத்து படுத்துக்கொண்டான். இந்த நிலைவரத்தின் பின்னணியில்தான் அவன் இருதயத்தின் பயத்தையும், கலக்கத்தையும், குமுறலையும் கண்ட கர்த்தர் சொப்பனத்தில் அவனுக்குத் தரிசனமானார். ஓர் ஏணி பூமியையும் வானத்தின் நுனியையும் எட்டுகிற வண்ணமாக இருந்தது. தேவதூதர்கள் அந்த ஏணியில் இறங்குவதும், ஏறுவதுமாக இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று யாக்கோபுடன் பேசினார். **“நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்” (ஆதி.28:15).** கைவிடப்பட்டு விட்டோமோ என்ற பயத்தோடிருந்தவனுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. ஆனாலும் யாக்கோபு “தேவன் என்னோடிருந்து, நான் போகிற வழியிலே என்னைக் காப்பாற்றி, எனக்கு ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத்தந்து என் தகப்பன் வீட்டிற்கு சமாதானத்தோடே திரும்பிவரப் பண்ணுவீரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்” என்று பதிலளித் தான் (வ.20). ஒரு பெருஞ்செல்வந்தனின் மகன் உண்ண உணவும், உடுக்க உடையும் தரும்படி ஆண்டவரைக் கேட்கிறான் என்றால் அவனுடைய பரிதாப நிலையை எண்ணிப்பாருங்கள். அவன் ஒன்றும் இல்லாதவனைப் போலானான்.

பயணத்தைத் தொடருகிறான். இன்னும் சுமார் 10 நாள்கள் கால்நடைப் பயணமிருக்கிறது. தன் தகப்பன் வீட்டில் அநேக ஒட்டகங்கள், கழுதைகள் உண்டு என்பது அவனது நினைவுக்கு வருகிறது. ஆனால் இப்பொழுது நடந்தே செல்லுகிறான். லாபான் எப்படிப்பட்டவரோ, எப்படித் தன்னை நடத்துவாரோ என்ற அச்சமும் தோன்றி மறைகிறது. லாபான் எப்படிப்பட்டவன் என்பது ரெபெக்காளுக்கும் தெரியும், ஈசாக்கிற்கும் தெரியும். லாபான் என்று சொன்னால் எபிரேய மொழியில் மூன்று அர்த்தங்கள் உண்டு. ஒன்று “வெள்ளை” (White) அதாவது வெள்ளை போன்ற மனதுள்ளவன். மற்றொன்று, “பிரகாசிக்கிறவர்” (Shining) மூன்றாவது எளிதில் “உடைந்து போகும் தன்மை” (Brittle). ஆனால் இந்த மூன்று காரியமும் வெளித்தோற் றத்தின்படி மாத்திரம்தான். ஆனால் உள்ளான மனதில் அவன் முற்றிலும் மாறுபட்டவன். அப்படியானால் அவன் எப்படிப்பட்டவன் என்பதை யூகித்துக் கொள்ளலாம். சுருக்கமாகச் சொன்னால் அவன் எத்தனுக்கு எத்தன், யோர்தானைக்கடந்து இப்பொழுது லாபானிடத்தில் போய்ச் சேர்ந்துவிட்டான்.

யாக்கோபு, லாபானின் இரண்டாவது மகள் ராகேலின் மேல் பிரியம் வைத்தான். அவளுக்காக 7வருஷம் வேலை செய்கிறேன் என்றான்.

யூதர்களுடைய திருமண முறைமையின்படி மணமகன் உத்தரவாதத் தொகையாக 50 சேக்கல் வெள்ளிக் காசு மணமகளுக்கு கொடுக்க வேண்டும். ஏனெனில் ஓர் ஆணின் மதிப்பீடு 50 சேக்கல் வெள்ளிக்காசு என்று கணிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவாதத் தொகையைச் செலுத்திய 7 ஆண்டுகளுக்குள்ளாக ஒரு கணவனும் மனைவியும் தனிக்குடித்தனம் செய்வதற்குத் தேவையானதை அவன் சம்பாதிக்க வேண்டும். சம்பாதித்து ஆயத்தமாகி வந்து விட்டால் திருமணம் நடக்கும். அந்த வெள்ளிக்காசை அவள் திருமணநாள் வரை பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அதை தொலைத்துவிடக்கூடாது. அப்படித் தொலைத்துவிட்டால் திருமணம் நின்றுபோவதற்கும் ஏதுவாகும். நமது மணவாளனாகிய இயேசு கிறிஸ்து மணவாட்டியாகிய நமக்கு விலைக்கிரயமாக தம்முடைய சொந்த இரத்தத்தையே கொடுத்து உத்தரவாதம் செய்துள்ளார். இப்பொழுது நமக்காக ஒரு வீட்டை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். அதை முடித்தபின் அவர் மீண்டும் வந்து அவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே நாமும் இருக்க நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு அழைத்துச் செல்வார் (யோவா.14:2,3). மணவாட்டி அவளுக்காகக் கொடுக்கப்பட்ட 50 சேக்கல் வெள்ளிக்காசைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். 10 வெள்ளிக்காசைத் தொலைத்து விட்ட பெண் எவ்வளவாய் அதைத் தேடிக் கண்டுபிடித்தாள் என்பதை இயேசு ஓர் உவமையாகச் சொன்னதை வாசிக்கிறோம் (லூக்.15:8,9). அவள் கண்டுபிடித்ததை அயலகத்தாரோடு கண்டுபிடித்ததைக் கொண்டாடியதற்கு காரணம் அதுதான். ஏனெனில் அது மணவாளன் அவளுக்காகக் கொடுத்த உத்தரவாதப்பணம். அந்தத் தொகைக்கு ஈடாகத்தான் லாபானின் ஆடுகளை மேய்க்கும் வேலையை ஒப்புக்கொண்டான். ஆனால் 7வருஷ முடிவில் லாபான் யாக்கோபை வஞ்சித்து கூச்சப்பார்வையுள்ள முதல் மகள் லேயாளை திருமணம் செய்து கொடுத்தான். யாக்கோபு அதைப் பின்னர்தான் விளங்கிக் கொண்டான். ராகேலுக்காக மீண்டும் 7 வருஷம் ஆடுமேய்க்கப் பணித்தான். அதையும் செய்து முடித்தான். பின்னர் ராகேலையும் திருமணம் செய்துகொண்டான்.

14 ஆண்டுகள் உருண்டோடிற்று. ஆனால் எந்தக் காலக்கட்டத்திலும் உன்னைத் திரும்ப அழைத்தனுப்புவேன் என்று வாக்களித்த ஈசாக்கு அதை நிறைவேற்றத் தவறிவிட்டார். அது நிறைவேற்றப்படாத அல்லது பொய்யான வாக்குத் தத்தமாகவே போயிற்று. யாக்கோபு லாபானின் நுகத்தடியிலேயே இருந்து பாடுபட வேண்டியதாயிற்று. நுகத்தின் அழுத்தம் பெருகிக்கொண்டே இருந்தது. அவனை விடுவிப்பார் யாருமில்லை. அவனை விசாரிப்பார் யாருமில்லை. அதை யாரிடமும் சொல்லவும் முடியாது. ஆனால் கர்த்தர் அவனுக்கு இரங்கினார். நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்து விடுவிக்க கர்த்தர் ஒருவரால் தான் முடியும் என்பதை உணர்ந்தான் (எரே.2:20). பெத்தேலில் தனக்கு தரிசனமாகிய கர்த்தரையும் அவரிடத்தில் ஏறெடுத்த விண்ணப்பத்தையும், தான் எடுத்த பொருத்தனையையும் நினைவு கூர்ந்தான். இப்படிப்பட்ட நுகத்தடியை நீங்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களா. உங்கள் பிரச்சனைகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் யாரும் எனக்குப் பரிகாரம் செய்யமுடியாது என்றும் எண்ணுகிறீர்களா?

- தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805

e-mail to : wocmdu@gmail.com